بِسۡمِ اللّٰہِ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ

**ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹுத் தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் *06/06/2025* அன்று *U.K* - இஸ்லாமாபாதிலுள்ள முபாரக் பள்ளிவாசலில் ஆற்றிய ஈதுல் அழ்ஹா பேருரையின் சுருக்கம்**

**நமது பெருநாள் வெறும் வெளிப்படையான (காண்பிப்பதற்கான) பெருநாளாக மட்டும் இருந்துவிடக் கூடாது; மாறாக, அல்லாஹ்வின் உரிமைகளையும் அடியார்களின் உரிமைகளையும் நிறைவேற்றக்கூடிய பெருநாளாக அமைய வேண்டும்**

أَشْهَدُ أَنْ لَّآ إِلٰهَ إِلَّا اللّٰهُ وَحْدَهٗ لَا شَرِيْكَ لَهٗ وَأَشْهَدُ أَنَّ مُحَمَّدًا عَبْدُهٗ وَرَسُوْلُهٗ۔ أَمَّا بَعْدُ فَأَعُوْذُ بِاللّٰهِ مِنَ الشَّيْطٰنِ الرَّجِيْمِ۔

بِسۡمِ اللّٰہِ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ ﴿۱﴾ اَلۡحَمۡدُ لِلّٰہِ رَبِّ الۡعٰلَمِیۡنَ ﴿۲﴾ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ ﴿۳﴾ مٰلِکِ یَوۡمِ الدِّیۡنِ ﴿۴﴾ اِیَّاکَ نَعۡبُدُ وَ اِیَّاکَ نَسۡتَعِیۡنُ ﴿۵﴾ اِہۡدِنَا الصِّرَاطَ الۡمُسۡتَقِیۡمَ ﴿۶﴾ صِرَاطَ الَّذِیۡنَ اَنۡعَمۡتَ عَلَیۡہِمۡ ۬ۙ غَیۡرِ الۡمَغۡضُوۡبِ عَلَیۡہِمۡ وَ لَا الضَّآلِّیۡنَ ﴿۷﴾

*ஹுஸூர் அய்யதஹுல்லாஹுத் தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள் குத்பாவின் ஆரம்பத்தில் சூரா ஹஜ்ஜுடைய 35 முதல் 39 வரையிலான வசனங்களை ஓதிய பிறகு கூறினார்கள்:*

இதில், குர்பானி (தியாகம்) என்பது மற்றொன்றின் உயிரைத் தியாகம் செய்வது மட்டுமே கிடையாது - உதாரணமாக, ஈதுல் அழ்ஹாவின் போது கால்நடைகள் அறுத்துப் பலியிடப்படுகின்றன - மாறாக, உயர்ந்த ஒரு பொருளை அடைவதற்காக அற்பமான ஒரு பொருள் தியாகம் செய்யப்பட வேண்டும் என்பதையும், அவ்வாறே உங்களைப் படைத்த இறைவனுக்காக நீங்களும் தியாகம் செய்ய எப்போதும் ஆயத்தமாக இருக்க வேண்டும் என்பதையும் நமக்கு விளக்குகிறது.

அல்லாஹ் உங்களிடமிருந்து இறையச்சத்தை (தக்வாவை) மட்டுமே எதிர்பார்க்கிறான். அவனது அச்சமும், பயமும் உங்களின் உள்ளங்களில் இருக்க வேண்டும் என்றும், அவனது கட்டளைகளின்படி செயல்பட்டு அவனது திருப்தியை எவ்வாறு பெறுவது என்பதில் ஒவ்வொரு நேரமும் நீங்கள் முயற்சிப்பவர்களாக இருக்க வேண்டும் என்பதையுமே அல்லாஹ் உங்களிடமிருந்து விரும்புகிறான்.

இன்றைய நாட்களில் பாகிஸ்தானில் அஹ்மதிய்யா ஜமாஅத்தினர் குர்பானி கொடுப்பதிலிருந்து தடுக்கப்படுகின்றனர். கடந்த பல ஆண்டுகளாகவே நாம் குர்பானி கொடுப்பதிலிருந்து தடுக்கப்படுவது நடந்து வருகிறது. ஆனால், அசல் விஷயம் இறையச்சமாகும். அதாவது, குர்பானி கொடுக்க அனுமதிக்கப்படாவிட்டாலும் நாம் எந்த எண்ணத்துடன் குர்பானி கொடுக்க விரும்பினோம் என்பதை அல்லாஹ் அறிவான். நமது எண்ணம் இறையச்சத்தின் அடிப்படையில் குர்பானி கொடுப்பதாக இருந்தால், நாம் குர்பானி கொடுக்காவிட்டாலும் அல்லாஹ் நமது குர்பானிகளை ஏற்றுக் கொள்பவன் ஆவான்.

எவர்கள் பிறருக்கு காண்பிப்பதற்காக குர்பானி கொடுக்கிறார்களோ, அது இறையச்சம் அற்ற குர்பானியாகும். இத்தகையவர்கள் அல்லாஹ்வின் கட்டளைகளின்படி செயல்படுகிறார்களா? பிறரின் உரிமைகளை காலால் மிதித்து நசுக்க வேண்டும் என்று அல்லாஹ் கட்டளையிட்டுள்ளானா? மக்கள் மீது அநீதி இழைக்க வேண்டும் என்றோ அல்லது இறைவனை வழிபடுவதிலிருந்து அவர்களைத் தடுக்க

வேண்டும் என்றோ அல்லாஹ் கூறுகிறானா? (என்று சிந்தித்துப் பார்க்க வேண்டும்.) நிச்சயமாக அல்லாஹ் இத்தகைய கட்டளைகளை வழங்கவில்லை.

எல்லாம் வல்ல அல்லாஹ்வோ 'லா இலாஹ இல்லல்லாஹ்' (அல்லாஹ்வைத் தவிர வணக்கத்திற்குரியவன் வேறு எவருமில்லை) என்று கூறுகின்ற ஒவ்வொரு நபரையும் அவர் முஸ்லிம் என்று கூறுகிறான். ஆனால், இன்றைய நாட்களில் பாகிஸ்தானில் அஹ்மதிகள் மீது இவர்கள் இழைத்து வரும் இத்தகைய செயல்கள், இறைவனிடமிருந்து தூரமாக்கக் கூடியவையாகும்; இது அநீதியாகும். எவ்வாறிருப்பினும், இந்தக் குர்பானிகள் அல்லாஹ்வின் நெருக்கத்தைப் பெறுவதற்காகவே உள்ளன என்பதை நாம் புரிந்துகொள்ள வேண்டும்; இது நம்முடைய கடமையாகும். எனவே, நம்மால் குர்பானி கொடுக்க முடியாமல் போனாலும் அல்லாஹ் அதனை ஏற்றுக்கொள்வான். ஏனெனில், 'உங்களின் குர்பானிகளின் இறைச்சியோ அல்லது இரத்தமோ என்னை வந்தடைவதில்லை; மாறாக உங்களின் இறையச்சமே என்னை வந்தடைகிறது' என்று அவன் கூறியுள்ளான்.

அல்லாஹ்வின் உரிமைகளை நிறைவேற்றுவதும், அவனை வணங்குவதுமே உங்களின் படைப்பின் நோக்கம் என்று அல்லாஹ் தெளிவாகக் கூறியுள்ளான். இதில் முதன்மையான விஷயம், தொழுகையை ஜமாஅத்தாக நிலைநாட்டுவதாகும். இன்றைய காலகட்டத்தில் எல்லாத் திசைகளிலிருந்தும் நெருக்கடிகள் கொடுக்கப்பட்டு வரும் நிலையில், நாம் முன்பைவிட அதிகமாக நமது தொழுகைகளைப் பேணுவது நமது கடமையாகும். எவ்வாறு ஒரு விலங்கு அறுக்கப்படும்போது துடிக்கின்றதோ அவ்வாறே நாம் அல்லாஹ்வின் முன்னிலையில் அழுதழுது துஆ செய்து நமது செயல்களின் மூலம் அதை வெளிப்படுத்த வேண்டும். குறிப்பாக, பாகிஸ்தானில் வசிக்கும் அஹ்மதிகள் இதில் அதிக கவனம் செலுத்த வேண்டும். ஏதோ கடமைக்காகத் தொழுகைகளை நிறைவேற்றாமல், அவற்றின் உரிமைகளை நிறைவேற்றும் வகையில் தொழ வேண்டும். தொழுகைகளை ஜமாஅத்தாகவும், மிக அழகிய முறையிலும் நிறைவேற்ற வேண்டும்.

நாம் நம்முடைய இறை வணக்கங்களின் தரத்தை உயர்த்துவோம் என இன்று உறுதி ஏற்போம். பாகிஸ்தானில் ஒருவேளை நமக்கு பெருநாள் தொழுகை நடத்த அனுமதி கிடைக்காமல் போகலாம்; அல்லது நிர்வாகத் தரப்பிலிருந்து கட்டுப்பாடுகள் விதிக்கப்படலாம் அல்லது (ஏற்கனவே) விதிக்கப்பட்டும் இருக்கலாம். ஆனால், நாம் அதைப் பற்றி கவலைப்படக் கூடாது; நமது உள்ளங்களில் அவநம்பிக்கைக்கு இடம் அளிக்கக் கூடாது. (மாறாக,) உங்களது வீடுகளிலேயே பெருநாள் தொழுகையை நிறைவேற்றிக் கொள்ளுங்கள். அல்லாஹ்வை வணங்குவதிலும் அவனது அடியார்களின் உரிமைகளை நிறைவேற்றுவதிலும் நாம் முயற்சி செய்வோம் என்று உறுதி எடுக்க வேண்டும். தொழுகையின் உரிமையை நிறைவேற்ற நாம் முழுமையாக முயற்சி செய்ய வேண்டும்.

**ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகிறார்கள்**: "இறைவணக்கத்தில் இரண்டு வகைகள் உள்ளன. ஒன்று, மனிதன் அல்லாஹ்விடம் எவ்வாறு அஞ்ச வேண்டுமோ அவ்வாறு அஞ்சுவது. இரண்டாவது, மனிதன் இறைவனிடம் எவ்வாறு அன்பு செலுத்த வேண்டுமோ அவ்வாறு அன்பு செலுத்துவதாகும்."

இஸ்லாம் இந்த இரண்டு கட்டளைகளையும் நிறைவேற்றுவதற்கு நிர்ணயித்துள்ள வழிமுறைகளில் தொழுகையை ஒரு வழிமுறையாக வைத்துள்ளது. அதில் இறை அச்சத்தின் அம்சம் உள்ளது. இரண்டாவதாக, அன்பின் அம்சத்தை

வெளிப்படுத்துவதற்காக ஹஜ்ஜை வைத்துள்ளது. அஹ்மதிகள் தங்களது ஈமானிலிருந்து விலகிச் செல்ல வேண்டும் என்பதே எதிரிகளின் முயற்சியாக இருக்கிறது. ஆனால் இதில் அவர்கள் ஒருபோதும் வெற்றி பெற முடியாது. எவர் உறுதியான அஹ்மதியோ, எவருடைய உள்ளத்தில் ஈமான் இருக்கிறதோ, அவர் இவர்களது அநீதிகளால் ஒருபோதும் பின்வாங்க மாட்டார். இந்த நாட்களில் நமது இறை வணக்கங்களின் தரத்தை உயர்த்துவதற்கு நாம் முயற்சி செய்ய வேண்டும்.

பாகிஸ்தானிலுள்ள பல அஹ்மதிகளின் உறவினர்கள் வெளிநாடுகளில் வசிக்கின்றனர். பாகிஸ்தானில் உள்ள அஹ்மதிகள் அங்கு குர்பானி கொடுக்க முடியாவிட்டால், வெளிநாடுகளில் உள்ள தங்களது உறவினர்கள் மூலமாக குர்பானி கொடுக்கச் செய்யலாம். ஆஃப்ரிக்காவின் ஏழை நாடுகளிலும் குர்பானி கொடுக்கச் செய்யலாம். குர்பானி கொடுப்பதிலிருந்து தடுக்கப்பட்டால், குர்பானி கொடுப்பதற்கு அல்லாஹ் வேறு வழிகளையும் வழங்கியுள்ளான். ஏழைகளைக் கவனித்துக் கொள்ளுங்கள் என்று அல்லாஹ் கூறியுள்ளான். அவர்களுக்கு உணவளிக்க வேண்டும்; அவர்களின் தேவைகளைக் கவனித்துக் கொள்ள வேண்டும். அல்லாஹ், ஹஜ்ஜுடன் குர்பானியை வைத்துள்ளான். ஆனால் குர்பானி கொடுப்பதற்கான பல சந்தர்ப்பங்களும் உள்ளன; அவற்றிலிருந்து நாம் பயன்பெற வேண்டும். பிறகு, நேரம் மற்றும் பொருளைத் தியாகம் செய்வதும் ஒரு குர்பானியாகும். அதற்காகவும் முழுமையாக முயற்சி செய்யுங்கள். பிறகு, எந்தக் விஷயங்களை விட்டு அல்லாஹ் தடுத்துள்ளானோ அவற்றிலிருந்து விலகி இருப்பதும் ஒரு குர்பானியாகும்.

பிறகு, அடியார்களின் உரிமைகளும் மிகவும் முக்கியமானவை. இதில் கணவன் மனைவி, சகோதர சகோதரிகள், நெருங்கிய உறவினர்கள் என அனைவரது உரிமைகளும் அடங்கும். அண்டை வீட்டார் மற்றும் அப்பகுதி மக்களின் உரிமைகளும் உள்ளன. இந்த அனைவரையும் கவனித்தில் கொள்ள வேண்டும். இஸ்லாம் எதிரிகளுக்கான உரிமைகளையும் வழங்கியுள்ளது. முஸ்லிம் அல்லாதவர்களுக்கான உரிமைகளையும் வழங்கியுள்ளது. அடியார்களின் உரிமைகளை நாம் முழுமையாக நிறைவேற்றினால், அந்த அடியார்களின் உரிமைகள் சில நேரங்களில் இறை வணக்கத்தின் தோற்றத்தை பெற்று விடுகின்றன. அவ்வாறு இருக்கும்போது, நாம் இறைவணக்கம் செய்வதிலிருந்து தடுக்கப்படுகின்றோம் என்ற விஷயத்தினால் எவ்வித வேறுபாடும் ஏற்பட்டு விடப்போவதில்லை. நீங்கள் ஓர் ஆட்டை அறுத்துப் பலியிடுவதால் மட்டும் அல்லாஹ் திருப்தியடைந்து விடுவதில்லை. மாறாக அடியார்களின் உரிமைகளை நிறைவேற்றுவதாலேயே அல்லாஹ் திருப்தியடைகிறான்.

**தான் விரும்புவதை தனது சகோதரனுக்கும் விரும்பாத வரையில் உங்களில் எவரும் இறைநம்பிக்கையாளராக ஆக முடியாது** என்று ஹதீஸில் வந்துள்ளது. **நீங்கள் ஈமான் கொள்ளும் வரை சொர்க்கத்தில் நுழைய முடியாது; நீங்கள் ஒருவரையொருவர் நேசிக்கும் வரை உங்களால் ஈமான் கொள்ள முடியாது** என்று ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் கூறியுள்ளார்கள்.

எனவே, அஹ்மதிகள் தங்களுக்கு இடையிலுள்ள அனைத்துவிதமான கசப்புணர்வையும் முடிவுக்குக் கொண்டு வர வேண்டும். இதன் மூலம் நாம் மறுமையின் சொர்க்கங்களுக்கு வாரிசுகளாவதோடு மட்டுமல்லாமல், இவ்வுலகிலும் சொர்க்கத்தைப் போன்றதொரு சமூகத்தை உருவாக்க முடியும். இன்றைய சூழ்நிலைகளில், அஹ்மதிகள் குறிப்பாக அனைத்துப் பிணக்குகளையும் களைந்து ஓர் அழகான சமூகத்திற்கு அடித்தளமிட வேண்டும்; அப்போதுதான் எதிரிகளால் எந்த வகையிலும் நமது அணியை உடைக்க முடியாது. நமக்குள் இறையச்சம் உண்டானால்

மட்டுமே நாம் அல்லாஹ்வின் நெருக்கத்தைப் பெறுபவர்களாக இருப்போம். அப்போது (வெளிப்படையாக) குர்பானி கொடுக்காவிட்டாலும் நாம் குர்பானி கொடுத்தவர்களாகவே கருதப்படுவோம்.

**ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகிறார்கள்**: "நமது நபி (ஸல்) அவர்கள் உருவாக்கிய ஜமாஅத்தில் இருந்த ஒவ்வொருவரும் தூய்மையான உள்ளம் கொண்டவர்களாகவும், மார்க்கத்திற்காகத் தமது உயிரையே தியாகம் செய்தவர்களாகவும் இருந்தார்கள். அவர்களில் ஒருவர் கூட நயவஞ்சகமான வாழ்க்கையைக் கொண்டிருக்கவில்லை."

நமது இந்த பெருநாள் வெறும் வெளிப்படையான பெருநாளாக இருந்துவிடாமல், அல்லாஹ்வின் உரிமைகளையும், அடியார்களின் உரிமைகளையும் நிறைவேற்றக்கூடிய பெருநாளாக அல்லாஹ் ஆக்குவானாக! நாம் அவனது அருட்கொடைகளைப் பெறுபவர்களாக ஆகிக் கொண்டே செல்வோமாக! துஆவும் செய்யுங்கள்; உங்களது துஆக்களில் இறைவனுக்காக உயிரை தியாகம் செய்த ஷஹீதுகளின் பிள்ளைகளையும் நினைவில் கொள்ளுங்கள். அல்லாஹ் அவர்களையும் அவர்களது சந்ததியினரையும் தனது பாதுகாப்பில் வைப்பானாக! இறை வழியில் கைதாகி சிறையில் இருப்பவர்களுக்காகவும் துஆ செய்யுங்கள். குறிப்பாக பாகிஸ்தானில் சட்டரீதியாகப் பல தடைகள் விதிக்கப்பட்டுள்ளன; அல்லாஹ் அந்தத் தடைகளை நீக்க வேண்டும் என்றும், உண்மையான அர்த்தத்தில் நாம் வெளிப்படையாக இறைவணக்கத்தின் உரிமையை நிறைவேற்ற நமக்கு நல்வாய்ப்பை வழங்க வேண்டும் என்றும் துஆ செய்யுங்கள். அனைத்துத் தடைகளும் நீங்கி, சுதந்திரமாக நாம் கால்நடைகளைக் குர்பானி கொடுக்கவும் வாய்ப்பு கிடைக்கட்டும். இந்தத் தியாகங்களின் ஆன்மாவைப் புரிந்து கொள்ளக் கூடிய அந்த அறிவையும் புரிதலையும் அல்லாஹ் நமக்கு வழங்குவானாக!

*பெருநாள் குத்பாவின் இறுதியில் ஹுஸூர் அய்யதஹுல்லாஹுத் தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள் கூறினார்கள்:* இந்த குத்பாவைக் கேட்டுக் கொண்டிருக்கும் அனைவருக்கும், இங்கே அமர்ந்திருக்கும் அனைவருக்கும் நான் ஈத் முபாரக் (பெருநாள் வாழ்த்துக்களை) தெரிவித்துக் கொள்கிறேன். அல்லாஹ் இந்தப் பெருநாளை அருள் நிறைந்ததாக ஆக்குவானாக!

اَلْحَمْدُ لِلّٰهِ نَحْمَدُهٗ وَنَسْتَعِيْنُهٗ وَنَسْتَغْفِرُهٗ وَنُؤْمِنُ بِهٖ وَنَتَوَكَّلُ عَلَيْهِ وَنَعُوْذُ بِاللّٰهِ مِنْ شُرُوْرِ اَنْفُسِنَا وَمِنْ سَيِّئَاتِ اَعْمَالِنَا مَنْ يَّهْدِهِ اللّٰهُ فَلَا مُضِلَّ لَهٗ وَمَنْ يُّضْلِلْهُ فَلَا هَادِيَ لَهٗ وَنَشْهَدُ اَنْ لَّآ اِلٰهَ اِلَّا اللّٰهُ وَنَشْهَدُ اَنَّ مُحَمَّدًا عَبْدُهٗ وَرَسُوْلُهٗ، عِبَادَ اللّٰهِ رَحِمَكُمُ اللّٰهُ اِنَّ اللّٰهَ يَأْمُرُ بِالْعَدْلِ وَالْاِحْسَانِ وَاِيْتَآءِ ذِى الْقُرْبٰى وَيَنْهٰى عَنِ الْفَحْشَآءِ وَالْمُنْكَرِ وَالْبَغْيِ يَعِظُكُمْ لَعَلَّكُمْ تَذَكَّرُوْنَ اُذْكُرُوا اللّٰهَ يَذْكُرْكُمْ وَادْعُوْهُ يَسْتَجِبْ لَكُمْ وَلَذِكْرُ اللّٰهِ اَكْبَرُ۔

(தமிழாக்கம்: மவ்லவி அபுல் ஹஸன் ஆபித்)